# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணைப் பரீட்சை - 2015
## விஞ்ஞானம்

| தரம் :- 7 | சுட்டெண்:- ........................................ | நேரம்:- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

❖ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01) உணவுச் சங்கிலியின் ஆரம்பத்தில் எப்போதும் இருப்பது
1) தாவர உண்ணி 2) ஊன் உண்ணி 3) உற்பத்தியாக்கி 4) பிரிகையாக்கி

02) பின்வருவனவற்றுள் எது முழு ஒட்டுண்ணித் தாவரம் ஆகும்?
1) நெப்பந்திஸ் 2) தூத்துமக் கொத்தான்
3) குருவிச்சை 4) லொறாந்தஸ்

03) கடலில் வாழும் அங்கிகளில் எதிரியிடமிருந்து தன்னைப் பாதுகாக்க கறுப்பு நிறப் பொருளை வெளிவிடுடம் அங்கி
1) கணவாய் 2) மீன் 3) கடற்குதிரை 4) கடல்அனிமனி

04) தமது வாழ்க்கை காலத்தில் ஒருமுறை மாத்திரமே குடிபெயரும் மீன்
1) திருக்கை 2) சுறா 3) சமன்மீன் 4) இழுதுமீன்

05) குடிபெயர்வு ஒன்று நிகழக் காரணமாக அமையாதது எது?
1) தகாத காலநிலை 2) வாய்ப்பான வெப்பநிலை
3) உணவுப் பற்றாக்குறை 4) இனப்பெருக்கம்

06) பிரிகையாக்கியாக தொழிற்படக் கூடியது
1) பறவை 2) குரங்கு 3) பக்ரீரியா 4) அல்கா

07) மிக வெப்பமான காலநிலை நிலவும் போது இலைகளை உதிர்க்கும் தாவரம்
1) றப்பர் 2) பனை 3) மா 4) பலா

08) தாவரங்களின் சுவாசத்திற்கு பயன்படும் வாயு எது?
1) ஒட்சிசன் 2) காபனிரொட்சைட்
3) நைதரசன் 4) 1 உம், 2 உம் சரியானவை


09) அழுகல் வளரிக்கு தேவையான காரணிகள் பின்வருவனவற்றுள் எது?
1) ஈரலிப்பு 2) பொருத்தமான வெப்பநிலை
3) ஒட்சிசன் 4) மேற்கூறிய யாவும்

10) பாறைகளின் வெடிப்புக்களில் உள்ள நீர் பனிக்கட்டியாவதன் காரணமாக பாறைகள் மேலும் சிதைவடையும் இது எவ்வகை வானிலையாலழிதலாகும்
1) இரசாயன வானிலையாலழிதல் 2) நீர் வானிலையாலழிதல்
3) பௌதீக வானிலையாலழிதல் 4) மேற்கூறிய எவையுமல்ல

11) கனவளவின் சர்வதேச அலகு
1) $ml$ 2) $m^3$ 3) $M^3$ 4) ML



kalvi.lk

12) 


அருகே உள்ள அளவுச் சாடியில் உள்ள நீரின் கனவளவை சரியாக காட்டுவது

1) a
2) b
3) c
4) a யும் b யும் சரி

13) அடர்த்தியை அளக்கும் சர்வதேச அலகு

1) $kgm^{-3}$ 2) $gcm^{-3}$ 3) $KgM^{-3}$ 4) $GCm^{-3}$

14) இயங்கும் பொருளொன்றின் கதியை அளக்கும் சர்வதேச அலகு

1) $ms^{-1}$
2) $Ms^{-1}$
3) $MS^{-1}$
4) மேற்கூறிய யாவும் சரி

15) 1 km தூரத்தை மாணவன் ஒருவன் 50s இல் சைக்கிளில் ஓடி முடித்தான் எனின் அவனின் சைக்கிளின் கதி மீற்றர் / செக்கனில் தருக.

1) 20 2) $^{1}/_{50}$ 3) 50 4) 200


(15 × 2 = 30 புள்ளிகள்)

❖ பின்வரும் தரவுகள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் எழுதுக.

01) திரவங்களில் அடர்த்தி கூடியது இரசம் ஆகும். ( )
02) வீசும் காற்றினால் ஆவியீர்ப்பு வீதம் குறைக்கப்படும் ( )
03) கோழி மாறா உடல் வெப்பநிலையைக் கொண்ட விலங்கு ஆகும். ( )
04) திரவங்களின் அடர்த்தியை அளக்கப் பயன்படும் கருவி நீர்மானியாகும் ( )
05) வாழை மரத்திற்கு மூச்சு வேர்கள் உண்டு ( )

## பகுதி - II

➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளில் விடை எழுதுக.

01) 


i) மேலே தரப்பட்டுள்ள உபகரணங்களை இனங்கண்டு அவற்றைப் பெயரிடுக.

A - ..............................................................................

B - ..............................................................................

C - ..............................................................................

ii) மேலே உள்ள உபகரணங்களில் கீழிருந்து மேலாக அளவுத்திட்டம் உள்ள உபகரணம் எது?

..............................................................................................................

iii) குறித்த கனஅளவு மட்டும் அளக்கக் கூடிய உபகரணம் எது?

..............................................................................................................

iv) உபகரணம் Aயில் 40*ml* நீர் இருந்தது. அதனுள் கல் ஒன்றை இட்டதும் அதன் கனஅளவு 90*ml* ஆக உயர்ந்தது. அதன் கனஅளவு யாது?

..............................................................................................................

v) கல்லின் திணிவு 100*g* ஆயின் அதன் அடர்த்தியை $g/cm^3$ இல் காண்க.

..............................................................................................................

vi) திரவ அடர்த்தியை அளக்கும் பரிசோதனை சாலையிலுள்ள கருவி எது?


..............................................................................................................

vii) பிலிம்சோல் கோட்டின் பயன் யாது?

..............................................................................................................

..............................................................................................................

viii) பரிசோதனைக் குழாயினுள் நீர், மண்ணெண்ணை, தேங்காய் எண்ணெய் ஆகியன இடப்பட்டுள்ளன. a, b, c ஐ இனம்காண்க.




a - ..............................................................................

b - ..............................................................................

c - ..............................................................................

02) (A) மாணவர் குழு ஒன்று வரண்ட சூழல் தொகுதிகளை அவதானிக்கும் களப்பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.

1)

i) மேலே குறிப்பிட்ட சூழலின் விசேட இயல்புகள் 2 தருக.

..............................................................................................................

..............................................................................................................

ii) மாணவர் நாகதாளியையும் அலரியையும் மிகக் கவனமாக அவதானித்தனர். அச்சூழலில் வாழ்வதற்கு அவை கொண்டுள்ள இசைவாக்கங்களைத் தருக.

நாகதாளி ..............................................................................

..............................................................................

அலரி ..............................................................................

..............................................................................

2) சிறிது தூரம் சென்றதும் அவர்களால் பிறிதொரு சூழலை அவதானிக்க முடிந்தது.

i) ஒரு மாணவர்கள் சில வேர்கள் மேல்நோக்கி வளர்ந்திருப்பதைக் காட்டினர். அவ்வேர்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

..............................................................................................................

Education கல்வி அதியாபன

ii) இங்கு காணப்படும் தாவரம் ஒன்றின் பெயர் தருக.

..........................................................................................................

iii) இத்தாவரத்தின் வேர்கள் மேல் நோக்கி வளர்ந்தமைக்கான காரணத்தை விளக்குக.

..........................................................................................................

..........................................................................................................

iv) இது எவ்வகை சூழல் ஆகும்?

..........................................................................................................

(B) மேற்படி சூழல்களை அவதானித்த பின்னர் தோட்டம் ஒன்றிற்கு சென்றனர். அங்கு அவர்கள் அவதானித்த அங்கிகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.

(மாமரம், மிளகாய் செடி, குருவி, வெட்டுக்கிளி, பாம்பு, தவளை, மண்புழு

i) மேலே தரப்பட்ட அங்கிகளைப் பயன்படுத்தி 4 இணைப்புக்களை கொண்ட உணவுச் சங்கிலி ஒன்றை அமைக்குக.

..........................................................................................................

..........................................................................................................

ii) நீர் எழுதிய உணவுச் சங்கிலியில்

a. உற்பத்தியாக்கி எது? ..........................................................

b. 1ம் படி நுகரி எது? ..........................................................

c. 2ம் படி நுகரி எது? ..........................................................


d. ஊனுண்ணி எது? ..........................................................

e. தாவர உண்ணி எது? ..........................................................

iii) மண்புழு தோட்டத்தில் காணப்படுவதால் விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் என ஆசிரியர் கூறினார். அதற்கான காரணங்கள் இரண்டு தருக.

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

03) 


வெற்றிலை இலையின் மேற்தோல் உரியை மாணவர் குழுவொன்று ஒளிநுணுக்குக்காட்டியால் அவதானித்த படம் அருகே காட்டப்பட்டுள்ளது.

i) A, B, C ஆகியவற்றைப் பெயரிடுக.

A - ..........................................................

B - ..........................................................

C - ..........................................................

ii) A யினால் ஆற்றப்படும் தொழில் யாது?

..........................................................................................................

iii) ஒளித்தொகுப்பின் போது எவ்வாயு A யினால் உள்ளெடுக்கப்படும்?

..........................................................................................................

iv) சுவாசித்தலின் போது A யினால் உள்ளெடுக்கப்படும் வாயு எது?

..........................................................................................................



kalvi.lk

v) வரள் நிலத்தாவரங்களில் மேலே உள்ள அமைப்பில் காணத்தக்க மாற்றங்கள் இரண்டு தருக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

vi) வெற்றிலை மேற்றோல் உரியை நுணுக்குக்காட்டியில் பார்ப்பதற்குரிய பரிசோதனையின் படிமுறைகள் 4 தருக.

A - மேற்றோல் உரியை பெற்று நீரினுள் போடுதல்

B - ..........................................................................................................................

C - வழுக்கியை நுணுக்குக்காட்டியில் வைத்து தாள் வடிவில் நோக்கல்

D - ..........................................................................................................................

E - ..........................................................................................................................

04) (A) A, B, C, D எனும் மாணவர்கள் 400m தூரத்தை ஓடிமுடிக்க எடுத்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| போட்டியாளர் | எடுத்த நேரம் செக்கனில் |
|---|---|
| A | 20 |
| B | 40 |
| C | 25 |
| D | 50 |

i) A யினதும் C யினதும் கதியை கணிக்க

A - ..........................................................................................................

B - ..........................................................................................................

ii) மிகவும் குறைந்த கதியில் ஓடிய மாணவன் யார்?

..........................................................................................................................................


iii) மிகவும் கூடிய கதியில் ஓடிய மாணவன் யார்?

..........................................................................................................................................

iv) வாகனங்களின் கதியை அளக்கப் பயன்படும் கருவி எது?

..........................................................................................................................................

(B)




அருகே ஊசல் குண்டொன்று நூலில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது.

i) ஒரு அலைவு என்றால் என்ன?

..........................................................................................................

ii) 20 செக்கனில் 100 அலைவுகள் நடைபெற்றது எனின் அலைவு வீதத்தைக் கணிக்க.

..........................................................................................................................................

..........................................................................................................................................

iii) அன்றாட வாழ்க்கையில் ஊசல் குண்டு அசைவதை எங்கு காணலாம்?

..........................................................................................................................................

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page